★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமுகூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய
**சோபனா**
**ரெக்ஸ்ரைல்**
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

இன்றைய அதிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
நெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
**சோபனா**
**ரெக்ஸ்ரைல்**
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஆண்டு சித்திரை மீ 19 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 06 (02 - 05 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 75

## யாழ். நகரில் தொழிலாளர் எழுச்சியை நினைவூட்டிய ஊர்திகள்!



### இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 2

யாழ் மாவட்டப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றன.

இந்த தவணையில் இருந்து பாடசாலைகள் இருநேரமாக இயங்க இருக்கின்றன. (இ-3)

### 'மேதினப்பூங்கா'

சென்னை நகரில் உள்ள நேப்பியர் பூங்காவுக்கு 'மேதினப் பூங்கா' என்று பெயர் சூட்டப்பட்டது.

முதலமைச்சர் கருணாநிதி இப் பெயரைச் சூட்டினார்.

### சுபநேரம்

02-05- 1990
புதன்கிழமைசித்திரை 19
சுபநேரம்:
04-27 முதல் 05-57 வரை
இராகுகாலம்
11-57 முதல் 01-27 வரை
அட்டமி - நவமி

முச்சந்தி முரளி



தொழிலாளிகளின்ரை தினத்தை வலு ஜோராய் கொண்டாடியாச்சு எண்டு சொல்லுங்கோ...!

### தற்போதைய பேச்சுகள் தோல்வியுற்று

# அடக்குமுறை திணிக்கப்பட்டால்

# மீண்டும் தேசிய சுதந்திரப் போர்!

## யாழ் நகர மேதினக் கூட்டத்தில் அன்ரன் பாலசிங்கம் சூளுரை

யாழ்ப்பாணம், மே 2

இலங்கை அரசுடன் நாம் நடத்தும் பேச்சுவார்த்தை தோல்வியுற்று சிங்கள அடக்குமுறை எமது இனத்தின் மீது திணிக்கப்பட்டால் ஆயுதம் ஏந்தி மீண்டும் தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்போம். இதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

நேற்று யாழ். நகரில் விடுதலைப் புலிகள் நடத்திய மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு சூளுரைத்தார்.

விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி அரசியல் பொறுப்பாளர் செல்வி மாலினி தலைமையில் நடைபெற்ற இந்த மேதினக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கலந்துகொண்டனர்.

அங்கு பேசுகையில் டாக்டர் பாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

கடந்த 40 வருட காலமாக தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆளும் கட்சிகள் முயன்ற போது, எதிர்க்கட்சிகளும், சிங்கள இயக்கங்களும், பௌத்த குருமாரும், பத்திரிகைகளும் இன

( 5 ஆம் பக்கம் பார்க்க )



யாழ். நகரில் இடம் பெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டத்தில் முன்னணியின் பிரமுகர்கள் உரையாற்றுகின்றனர். மகளிர் பிரிவைச் சேர்ந்த ஜெயா திருமதி பாலசிங்கம், திரு.பாலசிங்கம் யோகி ஆகியோர். (படம்:கே. எஸ். ஆர்.)

### ★ கொழும்பில் நேற்று

## ஈ. பி. ஆர். எல். எவ்வும் மே தினப் பேரணியில்!

கொழும்பு, மே 2

ஈ. பி. ஆர். எல். எவ் அமைப்பு கொழும்பில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துடன் இணைந்து மே தின நிகழ்ச்சிகளை நடத்தியது.

இவர்களின் மே தின ஊர்வலம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனை அமைந்துள்ள சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலிருந்து நேற்று நண்பகல் ஆரம்பமாகி, கொம்பனித்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## இ. தொ. கா. மே தினக்கூட்டம்; ரஞ்சன் தமிழில் உரை!

கொழும்பு, மே 2

தலவாக்கொல்லையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினக் கூட்டம் நேற்று நடந்தது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா அங்கு தமிழில் பேசினார்.

காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் அங்கு பேசுகையில் -

தோட்டத் தொழிலாளர்கள் ஒருநாள் தோட்டங்களின் பங்குதாரர்களாக வருவார்கள்- என்றார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தமது உரையில் -

''தோட்டத் தொழிலாளரும் உற்பத்தியில் ஈடுபடுபவர்களும் இணைந்து செயல்பட்டால் தான் நாடு நன்மை அடைய முடியும். தோட்டங்களில் அமைதியைக் குலைக்க எந்தச் சக்திகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது'' என்று சொன்னார்.

துணை அமைச்சர்கள் பி, பி. தேவராஜ்,. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோரும் உரையாற்றினார்கள் [.உ-எ]

## நகரில் கவர்ச்சிமிகு ஊர்திகளும் எழுச்சிமிகு ஊர்வலங்களும்

யாழ்ப்பாணம், மே2

யாழ். குடாநாட்டின் நாலாதிக்குகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான ஊர்திகளுடன் ஊர்வலங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தைநேற்று மாலைஆறுமணியளவில் வந்து சேர்ந்தன.

ஊர்திகள் வந்து சேர்ந்ததும் நகர் களை கட்டத் தொடங்கியது. ஊர்திகள் கவர்ச்சி மிக்கனவாகவும் கண்ணைக் கவர்வனவாகவும் இருந்தன.

பெரும்பாலான ஊர்திகள் தத்ரூபமாகக் காட்சியளித்தன. சில எழுச்சியை ஊட்

( 5 ஆம் பக்கம் பார்க்க)





யாழ். முற்றவெளி மைதானத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டம் நடைபெற்ற அலங்கரிக்கப்பட்ட மேடையின் தோற்றம். (படம்:- கே. எஸ். ஆர்)

### கொழும்பு காலிமுகத் திடல்

## ஐ. தே. க. மேதின கூட்டத்தில் திரண்ட மக்கள் வெள்ளம்

கொழும்பு, மே 2

கொழும்பு காலிமுகத் திடலில் நேற்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய மே தினக் கூட்டத்தில் பல லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

முன் எப்போதும் இல்லாதவாறு மக்கள் திரண்டுவந்ததாகவும்—

சுமார் ஏழு லட்சம் பேர் வரை இக்கூட்டம் மற்றும் ஐ. தே. கவின் மே தினஊர்வலங்களில் பங்குபற்றியதாகவும்இலங்கை வானொலி அறிவித்தது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில்இருந்து ஆரம்பமானஐ. தே. கவின் மே தின ஊர்வலம் பொதுக் கூட்டம் நடைபெற்ற காலி முகத்திடலில்முடிவுற்றது.

அங்கு நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் கலைக் குழுக்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## தமிழ் தொழிலாளர்களை இடதுசாரிகள் ஏமாற்றினர்

### மே தினக் கூட்டத்தில் யோகி

யாழ்ப்பாணம், மே 2

இலங்கைத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு உதவ யாரும் தயாரில்லை என்று கூறிய இடதுசாரிகள் தமிழ்த் தொழிலாளர்களைத் தவறான பாதையில் இட்டுச் சென்று ஏமாற்றி வந்துள்ளனர். எமதுதேசிய விடுதலைப் போராட்டத்தில் சகல தொழிலாளர்களையும் ஓர் அணியின் கீழ் கொண்டு அவர்களுக்கு உரிய அந்தஸ்தைச் சமுதாயத்தில் தேடிக்கொடுப்போம்'.

நேற்று இரவு யாழ். முற்றவெளி மைதானத்தில் நடந்த மேதினக் கூட்டத்தில்பேசுகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தலை நகரில் நேற்று

## 18 இடதுசாரி அமைப்புக்கள் திக்குத் திக்காகக் கூட்டம்

கொழும்பு, மே 2

தலைநகர் கொழும்பில் நேற்று பல்வேறு இடங்களில் இருபது மேதினக் கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் 18 கூட்டங்கள் இடதுசாரி கட்சிகளாலும் மற்றும் அவற்றைச் சார்ந்த அமைப்புகளாலும் நடத்தப்பட்டன.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர்(புத்தகசாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### சஞ்சிகைகள்

கலைக்கதிர், கலைமகள், ஞானபூமி, ரத்தின பாலா, குமுதம், கல்கி, ஆனந்த விகடன், துக்ளக், பேசும்படம். பொம்மை, கல்கண்டு, இந்தியா டுடே,[தமிழ் ஆங்கிலம்] Time News week Sport Star Front Line மற்றும் சஞ்சிகைகள் அனைத்தும் சந்தா ஏற்றுக்கொள்கிறோம். வரும் மே மாதம் முதல் சஞ்சிகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/4340]

### வாகனங்கள் விற்பனைக்குண்டு

மொறிஸ் மைனர் EN 9811 கறுப்புக் கார், மோட்டார் சைக்கிள் G. P 100 சுசுக்கி 85 சிறி 2674 நீலம், மோட்டார் சைக்கிள் C-70 கொண்டா 101-9437 பச்சை ஆகியன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பொறியியலாளர், மந்திகை ஆஸ்பத்திரி, புலோலி.( C/4359)

### கோழிக்குஞ்சு விநியோகம்

கறுப்பு (புலிமத்) சேவற் குஞ்சுகள் செவ்வாய்க் கிழமை 1. 5. 90 இலும் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் புதன் கிழமை 2. 5. 90 இலும் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா And பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். (3420)

### REPAIR

Radio, T.V, Deck மற்றும் மின் உபகரணங்களை நல்ல முறையில் திருத்திக் கொள்ள உடன் நாடவேண்டிய இடம் G. P. Electronics, 317, மேல்மாடி, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/4344)

### German Language

பட்டப் படிப்புகளைத் தொடர்வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புகள் 2 - 5- 90இல் ஆரம்பமாகின்றன. தொடர்பு; Sabanayagam Director of Studies German Cultural Association 33, Kandy Road, Jaffna. Sornalingam, Secretary German Cultural Association 4, Gopal Lane, K. K. S. Road, Vannarpannai. (13003)

### தேவை

டிஸ்பென்சரிக்கு (Nurses) தாதிமார்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவோரும் முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். கொக்குவில், கோண்டாவில், தாவடி, திருநெல்வேலியில் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது. இல: 686 C/o உதயன். (3417)

### கல்வி

கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் 5. 5. 90 (சனி) தொடக்கம் முழு நேர வகுப்புகளாக நடைபெறும். S. ஜெயராஜா, இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர். (3419)

### தவறி விட்டது

30-1-90 தபால் புகையிரத வண்டியில் மீசாலையில் குடும்ப அல்பம் அடங்கிய பார்சலொன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தி. கனகலிங்கம் அரசடி, சுதுமலை கிழக்கு. மானிப்பாயில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12979)

## இலவச ஆங்கிலவகுப்பு

யாழ்ப்பாணம் மே 2

நல்லூரர் சமூகசேவை மன்றம் தனது சமூக சேவைத் திட்டத்தின் கீழ் இலவச ஆங்கில வகுப்புகளை நடத்தி வருகிறது

கீழ் வகுப்பு மாணவர்கள், மேல்வகுப்பு மாணவர்கள், வயதுவந்தவர்கள் என்று மூன்று பிரிவுகளாக இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன. (இ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1990-06-01 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. கல்வியில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்
2. கிறிஸ்தவ நாகரீகத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம்11 / உதவி விரிவுரையாளர்.
3. அரபுமொழி இஸ்லாமிய நாகரீகத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாளர்.
4. வணிகம்/ வியாபார நிருவாகத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்.
5. சமஸ்கிருதத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்.
6. நுண்கலையில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்.
7. கர்நாடக வாய்ப்பாட்டில்போதனாசிரியர் தரம் 111

**பதவி (1) :-**
வணிகத்தில் அடிப்படைபட்டத்தையும், கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமாவையும் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்**

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1:
9600-8x250-11600/ரூபா (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11:
8000-5x250-9250/-ரூபா (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்:
3900/- ரூபா மாதமொன்றுக்கு ஓராண்டுக்கு (நிலையானது)

போதனாசிரியர் தரம் 111:
3000-6x80-3480/-ரூபா (மாதமொன்றுக்கு)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் இதர விபரங்களும் இப்பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்துபெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23 x 10 சதம் மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியனவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் அல்லது அனுபவத்தையும் கவனித்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: நுண்கலையில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர்பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசிலனை செய்யப்படும்.

**பதிவாளர்.**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 - 04 - 27
(சி-4482)

## போட்டியில் வென்றோர்

தென்மராட்சியில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்.

பெண்கள். 1. எஸ். ஞானகௌரி - தனங்கிளப்பு, 2. கே. ஞானராசமணி- வரணி, 3. ஏ. ஜெயசுதா - மீசாலை

ஆண்கள். 1. விநாயகமூர்த்தி - மந்துவில், 2. சோமசுந்தரம் - வளர்மதி, 3. இராசேந்திரா - வளர்மதி. (இ-31)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்தம்பி விஜயநாதன்**
(பாபு)

மலர்வு: 01-06-1949
உதிர்வு: 13-04 1989

திதி: 02-05-1990

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எம்மை அன்போடும், பண்போடும் வளர்த்து, நல்வழிகாட்டி, வாழ வைத்த தெய்வமே! எம்மை விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு என்றென்றும் இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**மனைவி, மக்கள், தாய், மைத்துனர், சகோதர சகோதரிகள், மருமக்கள்.**

பூதராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை.
(3387)

## ஆய்வுகூட உதவியாளர் தேவை

கிளிநொச்சி மில்கோ ஸ்தாபனத்தின் பால் பதனிடும் தொழிற்சாலைக்கு ஆய்வு கூட உதவியாளர் பதவி வெற்றிடத்திற்கு இரசாயனப் பாடத்துடன் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவரும் ஆங்கிலத்தகைமை உள்ளவர்களும் 2/5/90 காலை 10 மணிக்கும் — 3 மணிக்குமிடையில் நேரில் முகாமையாளருடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுடன் சமுகம் தரவும்.

முகாமையாளர்,
மில்கோ,
கிளிநொச்சி.

(3384)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தியாகராஜா பாலசுந்தரம்**

பிறப்பு: 07 - 05 - 1939
இறப்பு: 13 - 05 - 1989

திதி:- -02 05 - 1990

வருடம் ஒன்று சென்றதுவே
வசந்தங்களை அது மறுத்ததுவே
சோகங்கள் என்பதே எமக்குப் பெரும் சுமையாகி
வெறும் தேகங்கள் மட்டும் இப்போது இங்கு
எண்ணங்கள் எப்போதும் உங்களைச்சுற்றியே
அவை எப்போதும் கண்ணீர் சிந்துமே

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மாமி, மைத்துனர், மைத்துனியர், சகோதரர்கள், சகோதரிகள்.**

இல: 25 கல்லுண்டாய் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். (3385)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கதிரவேலு கணேசு**
(ஆசிரியர், யா/புற்றளை ம.வி.)

தோற்றம்: 01.04.1940 அழிப்பு: 13.04.1989

திதி: 02. 05. 1990

ஆண்டு ஒன்று சென்றாலும் என்றும் எங்கள் நினைவை விட்டகலாத அன்புத் தெய்வமே! தீபமே! உங்கள் தியாகசேவை என்றும் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்,
**அன்பு மனைவி, மகன்.**

சந்தா தோட்டம்,
புலோலி தெற்கு, புலோலி. [12966]

## டிப்ளோமா மனைப் பொருளியல்
## DIPLOMA IN HOME ECONOMICS

- ★ கேக் ஐசிங்
- ★ சமையற் கலை:
  (கீழைத்தேய மேலைத்தேய உணவு, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள் தயாரித்தல்)
- ★ தையற் கலை:
  (சிறுவர் சிறுமியர் முதல் பெரியவர்கள் மகளிருக்கான உடைகள் தயாரித்தல்)
- ★ கூந்தல் அலங்காரம்:
  (கொண்டைகள் போடுதல், மணப்பெண் அலங்காரம், விக் தயாரித்தல்)
- ★ கை வேலை:
  (மக்றமி, நூல்வேலை, வைக்கோல் வேலை பொம்மைகள் தயாரித்தல்)
- ★ பூ வேலை:
  (கடதாசியிலும், துணிகளிலும், மலர்களை உருவாக்குதல்)
- ★ வர்ணம் தீட்டுதல்:
  (கண்ணாடிகளிலும், சாடிகளிலும் துணிகளிலும், வர்ணம் தீட்டுதல்)
- ★ வரைதல் (ART)
- ★ கோலங்கள் போடுதல்

- ● பயிற்சிக் காலம்: 6 மாதங்கள்
- ● பயிற்சியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
- ● பயிற்சிகள் யாவும் திங்கள், புதன் ஆகிய தினங்களில் காலை 8.30மணி முதல் 1.30 மணி வரை நடைபெறும்.

★ **புதிய வகுப்புகள் ஆரம்பம்: 07—05—90**

● தொழில் புரியும் பெண்களின் வசதிக்காக ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை பயிற்சிகள் நடைபெறும்.

விபரங்கட்கு:-

★ **கலாலயா** ★
(நுண்கலை, மனையியல் நிறுவனம்)
பதிவு இல. 16020
விக்டோரியா வீதி, யாழ்நகர்.
[சி-4358]

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அமரர்
**திருமதி இராஜமணி சிவசம்பு**
(சிவஞானம்)

மலர்வு: 28 - 10 - 1929
உதிர்வு: 02 - 04 - 1990

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே நீங்கள் எங்களைவிட்டு இறைவனடி சேர்ந்து இன்றுடன் ஒரு மாதமாகிறது என்றும் உங்களை மறவோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் எமது இல்லத்தில் இன்று நடைபெறும் பிரார்த்தனைக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
**க. சிவசம்பு குடும்பத்தினர்**

60, புது வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். [12980]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

**பொருள்:**

அனிச்ச மலரும் அன்னப்பறவையின் இறகும் ஆகிய இவை மாதரின் மெல்லிய அடிகளுக்கு நெருஞ்சி முள் போன்றவை.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

02 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


## வைத்தியக் காப்புறுதி

அரசாங்க ஊழியர்களுக்கு வைத்தியக் காப்புறுதித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான திட்டத்தை பொது நிர்வாக உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தயாரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருவில் இருக்கும் இந்தத் திட்டம் முழுமையாக உருப்பெற்று, அமைச்சரவை அங்கீகாரம் வாங்கி நடைமுறைக்கு வருவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை இப்போது சொல்லமுடியாது. அமைச்சர்கள் வகுக்கும் திட்டங்கள் பலவும், பத்திரிகைச் செய்திகளோடு கருகிப் போவதுண்டு. அந்தக்கதி திரு. பெஸ்டஸின் இந்தத் திட்டத்திற்கும் நேர்ந்துவிடக் கூடாது

ஊழியர் சேமலாப நிதியை இளைப்பாற்றுச் சம்பளமாக மாற்றுவது என்ற திட்டம் குறித்துப் பல வருடங்களுக்கு முன்பிருந்தே பேசப்படுகிறது. ஆனால் அது இன்னும் சரிவர நடைமுறைக்கு வரவில்லை. அது போன்ற கதி உத்தேச வைத்தியக் காப்புறுதித் திட்டத்திற்கும் ஏற்பட்டுவிடக்கூடாது

வளர்ச்சி அடைந்த பல நாடுகளில், வைத்தியக்காப்புறுதித் திட்டங்கள் அமுலில் இருந்து வருகின்றன. அந்த நாடுகளின் சமூக நலத் திட்டங்களில் வைத்திய காப்புறுதியும் ஒன்றாக இருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமன்றி ஏனைய துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் வைத்தியக் காப்புறுதி வசதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது; கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மக்கள் நலன்புரித் திட்டங்களில் சுகாதாரத்துக்கு, வைத்தியத்துக்குப் பிரதான இடம் வழங்கப்பட வேண்டியது அவசியம். மக்கள் சுகதேகிகளாக ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே ஆரோக்கியமான சமுதாயம் மலர முடியும். ஆரோக்கியமான மக்களால் மட்டுமே நன்றாக உழைத்து நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவ முடியும்.

நோய்கள் மனிதனைத் திடீரென தாக்கும் கொடிய எதிரிகள். ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்த ஒருவர் ஒரு சில நிமிட நேரத்தில் நோய் வாய்ப்பட்டு இறக்க நேரிடுவதும் இயற்கை. திடீரென வியாதி வந்ததும் அதற்கு உரிய சிகிச்சை பெறுவதற்கு இருந்தாற்போல பணவசதி எல்லோருக்கும் இருப்பதில்லை. வைத்தியச் செலவுக்கென முன்கூட்டியே மாதாந்தம் பணம் செலுத்தி தேவைப்படும் நேரத்தில் அதனைப் பெற்றுக்கொள்ள வசதி செய்வதே வைத்திய காப்புறுதி முறை. சம்பந்தப்பட்டவர் மட்டுமன்றி அவரை வேலை கொண்டவர்களும் காப்புறுதி நிதிக்கு மாதாந்தம் குறிப்பிட்ட பணத்தைச் செலுத்த வேண்டும். இப்போது சேமலாப நிதிக்குச் செலுத்துவதுபோல.

இது நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்குக் கையில் காசு இல்லையே என்ற கஷ்டத்தையும் கவலையையும் போக்குகிறது. வைத்திய வசதிகள் இலவசமில்லாத பல நாடுகளில், வைத்தியக் காப்புறுதி முறை மக்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது

வைத்தியக் காப்புறுதி அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும் என்று வரம்பிடப்படக்கூடாது. தனியார், கூட்டுறவு தோட்டத்துறை ஆகிய சகல துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். மாதச்சம்பளம் பெறும் உத்தியோகத்தர், ஊழியர், தொழிலாளர்களுக்கு மட்டும் எனவும் வரையறுக்கப்படக்கூடாது.

விவசாயம், கைத்தொழில், கைவினை, மீன்பிடி ஆகிய துறைகளில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள சகலருக்கும் வைத்திய காப்புறுதி வசதி செய்யப்பட வேண்டும்.

உழைக்கும் காலத்தில் மட்டுமன்றி, அதிலிருந்து ஓய்வு பெற்ற வயதான காலத்திலும், நோய்வந்தால் கஷ்டமின்றிச் சிகிச்சை பெறக்கூடியதாக வைத்தியக் காப்புறுதி மக்கட் சமூகத்தின் எல்லாத் தரப்பினருக்கும், மட்டத்தினருக்கும் உதவுவதாக இருக்கவேண்டும்.

வைத்தியக் காப்புறுதி முறை எப்போதோ நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டியது. இப்போதாவது அது குறித்து ஆலோசிக்கப்படுவது வரவேற்கக்கூடியது ஆனால் அது வெறும் வாய்ச்சொல்லோடு, மக்களுக்கு ஆசை காட்டும் கட்டத்தோடு நின்றுவிடக்கூடாது விரைந்து செயலாக்கப்பட வேண்டும்.

செயலாக்கப்படும் போதும், அரசாங்க ஊழியர்களுக்கு என்று மட்டும் கொண்டு வந்து, மக்களில் ஏனைய தரப்பினர்களைப் புறக்கணிக்காது எல்லோருக்கும் நலன் விளைவிக்கும் விதத்தில் பரந்த அடிப்படையில் அமுலாக்க வேண்டும்.

இது நாளடைவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டுமே இலவச வைத்தியம்: ஏனையோருக்கு வைத்திய காப்புறுதித் திட்டத்துக்கு உட்பட்ட வைத்தியம் என்ற நிலையை உருவாக்கலாம். அப்போதும் நோய்த்தடுப்புக்கென அரசு பணம் செலவிட்டே ஆகவேண்டும். சிகிச்சையைவிட முன்னேற்பாடாகத் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். அதுவே ஆரோக்கியமான மக்களை உருவாக்கப் பெருமளவில் உதவிடும்.

## வழியில் தவறவிடப்பட்ட பொதி இளைஞரால் திருப்பிஒப்படைப்பு

குருநகர் மே 2

மோட்டார் சைக்கிளில் இருந்து வீதியில் விழுந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள் அடங்கிய பொதி சில இளைஞர்களால் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த ஞாயிறு மாலை மண்டைதீவிலிருந்து யாழ்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மோடி நாட்டுக்கூத்து நூல் வெளியீடு

கொக்குவில், மே 2

கவிஞர் தேவதாசனால் இயற்றப்பட்ட 'வித்துக்கள்' என்னும் தென்மோடி நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழா 3 ஆம் திகதி வியாழக்கிழமை பி, ப. 5 30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதி திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும்.

அருட்திரு எஸ். இல்லறி ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தி. லோகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆசியுரை வழங்குவார், (இ-69)

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு வட்டி இல்லாக் கடன்

### பசளை வாங்குவதற்கு மக்கள்வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், மே 2

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு சிறுபோக விவசாயத்துக்கு தேவையான பசளை வகைகளை கொள்வனவு செய்ய வட்டியில்லாக் கடன் வழங்க மக்கள் வங்கி முன்வந்துள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் எடுத்த நடவடிக்கையின் பலனாக இந்த வசதி செய்து கொடுக்கப்படவிருக்கிறது.

இந்தக் கடன் வழங்கும் திட்டம் சம்பந்தமாக அரச அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் யாழ். பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளதாவது;

முன்பு கடன்பெற்று பணம் மீளச் செலுத்தாதவர்களும் இக்கடனைப் பெற விண்ணப்பிக்கலாம்.

★ நெல் மற்றும் பயிர்கள் ஆகக் கூடியது ஐந்து ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய வேண்டும். உருளைக்கிழங்கு அரை ஏக்கர் விவசாயத்தை செய்ய வேண்டும்.

★ கடன் பெறுவதற்கு பிணையாளர் தேவையில்லை.

★ கடன் பெற்று 180 நாளில் மீளச் செலுத்தாது விட்டால், கடன் பெற்ற நாளில் இருந்து மாதம் இரண்டு சதவீத வட்டி அறவிடப்படும்.

★ இந்தக்கடன் விவசாய விரிவாக்கப்பகுதி, கூட்டுறவு பகுதி ஆகியோரின் அனுசாரணையுடன் வழங்கப்படும்.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 3)

## ஐயந்தி விழா

யாழ்ப்பாணம், மே 2

மௌனகுரு கடவுள் சுவாமிகளின் ஐயந்திவிழா சனிக்கிழமை உடுவில் கிழக்கு "கடவுள் சந்நிதி" நிலையத்தில் சுவாமிகளின் பிரதம சிஷ்யை செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் கொண்டாடப்பட்டது.

சைவப் பெரியோர்களின் ஆத்மீக விரிவுரைகளும், பஜனைகளும், மற்றும் பூஜைகள்ஆராதனைகளும் இடம் பெற்றன. (இ-7)

## வாசகர் திருமுகம்

### நாமே அமைப்போம்

எமது நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக பல சமூக நலன் ஸ்தாபனங்கள் அழிவுகளுக்கு உட்படுத்தப்பட்டது யாவரும் அறிந்ததே. அத்துடன் பலர் அனாதைகள் ஆக்கப்பட்டதும் தெரிந்ததே.

சமூக ஸ்தாபனங்களாக கருதப்படும் நூல் நிலையங்கள் பாடசாலைகள் ஆகியவற்றை புனரமைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அரசாங்கம் அதனை முன்நின்று நடத்தாதது வருத்தத்திற்குரியதாகும்.

ஆகவே எமக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நாங்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

அனாதை விடுதிகள், நூல் நிலையங்கள், பாலர்பாடசாலைகள் போன்றவற்றை இறந்த போராளிகளின் ஞாபகார்த்தமாக அமைத்து எதிர்கால சமூக மறுமலர்ச்சிக்கு உதவ வித்திட வேண்டும்.

க. மயில்வாகனம்,
வல்வெட்டித்துறை.

## ஆசிரிய இடமாற்றம் குறித்து நாடளாவிய ரீதியில் ஆய்வு!

ஆசிரியர்களுக்குப் புதிய இடமாற்றத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு முன்னோடியாக நாடு தழுவிய ஆய்வுஒன்றைக் கல்விச்சேவை ஆணைக்குழு நடத்த உள்ளது.

—இத்தகவலை ஆணைக் குழுத்தலைவர் ஜோர்ஜ்மென்டிஸ் தெரிவித்தார்,

எல்லா ஆசிரிய இடமாற்றங்களும் இம்மாதத்துடன் நிறுத்தப்படும்.

பிந்திய இடமாற்றத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

புதிய இடமாற்றத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அது அடுத்த ஆண்டு முதல் அமுல் நடத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் கோரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## அரச ஊழியர் போதையில் இருந்தால் வேலை பறிபோகும்

அரசாங்க ஊழியர்கள் போதையில் இருந்தால் வேலை பறிபோகும்.

இது தொடர்பான சுற்றுநிருபம் அண்மையில் பொது நிருவாக மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது. ஒரு அரசாங்க ஊழியர் அலுவலகத்திலோ அலுவலக சூழலிலோ மதுபோதையில், அல்லது மது அருந்திய நிலையில் காணப்பட்டால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர் ஒருவர் மது அருந்தி இருந்ததை அல்லது போதைவஸ்து பாவித்திருந்ததை இரு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் சாட்சியமளித்து நிரூபிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஊழியர் பதவி நீக்கம் செய்யப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-120)

## இரத்தினபுரியில் விசா கார்ட் பற்றிய கலந்துரையாடல்

இரத்தினபுரி, மே 2

'இலங்கை வங்கி விசா கார்ட் பற்றிய கலந்துரையாடல் இலங்கை வங்கி சப்பிரகமுவ மாகாண அலுவலகத்தால் இம்மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை இரத்தினபுரி, இரத்தினலோகா ஹோட்டலில் நடத்தப்படும்.

மு. ப. 8.30 தொடக்கம் பி. ப. 12.15 வரை வர்த்தகர்களுக்கான கலந்துரையாடலும், பி. ப. 1.30 தொடக்கம் பி. ப. 2.15 வரை வங்கி அதிகாரிகளுக்கான கலந்துரையாடலும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## யாழ். பயணிகள் அவஸ்தை

கொழும்புகோட்டையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான 3 ஆம் வகுப்பு ரயில் ரிக்கெட் முடிவடைந்ததால் பிரயாணிகள் கோட்டை-கொக்குவிலுக்கான ரிக்கெட்டை அதிகபணம் கொடுத்துவாங்க வேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டது.

கடந்த திங்கட் கிழமை கோட்டை ரயில் நிலையத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-160)

## செய்முறை பரீட்சை

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இணுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற இருந்த முறைசாராக்கல்விப் பிரிவு ஹோட்டல் முகாமைத்துவ மாணவருக்கான செய்முறைப்பரீட்சை இம்மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (இ-30)

## சமய நிகழ்வுகளில்

### மாம்பழத்திருவிழா

யாழ்ப்பாணம், மே 2

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இம்மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மாம்பழத்திருவிழா நடைபெறும். (இ-7-

## யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் சிறு தொழில் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் மே 2

யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகம் சிறுதொழில் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறிகளை நடத்தவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து பிராந்திய தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இக்கற்கை நெறியில் 75 பேரைச் சேர்த்துக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-ப)

## செய்திக்கொத்து

### பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

வல்வெட்டித்துறை, மே 2

யாழ்ப்பாணம் வருவதற்காக ரயிலில் ஏறி இருந்த பெண்ணின் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் கடந்த திங்கள் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

முன்புறத்தில் பொருத்துவதற்காக ரயில் என்ஜின் சுழற்றப்பட்டபோது ஏற்பட்ட மின்தடையைப் பயன்படுத்தி திருடன் ஒருவன் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றான். (இ-160)

### ரயிலில் நெரிசல்

வல்வெட்டித்துறை, மே 2

கடந்த திங்கள் கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த ரயிலில் சனநெரிசல் மிகுதியாக இருந்தது. பிரயாணிகள் ஏறமுடியாது கஷ்டப்பட்டனர் நெரிசலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத பலர் மலசல கூடங்களில் நின்று கொண்டு பிரயாணம் செய்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

விசாரித்தபோது பயணம் என்ற பெயரில் பிரயாணிகள் இவ்வாறு துன்புறுவது அநேக நாட்களாக நடைபெறுகிறதெனத் தெரிய வந்தது. (ப-160)

### படங்களுக்கு கிராக்கி

முல்லைத்தீவு, மே 2

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு.வே. பிரபாகரன் புலிகள்மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) ஆகியோரின் படங்களுக்கு பெரும் கிராக்கி நிலவுகிறது.

இருவரும் ஒன்றிணைந்து தோன்றும் இப்படங்களை மக்கள் போட்டி போட்டுக் கொண்டு 5 ரூபா கொடுத்து வாங்குகின்றனர். (ப-92)

### ஆசி. அபிவிருத்தி வங்கி நிதியுதவி

முல்லைத்தீவு மே 2

முல்லைத்தீவுகடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தரின் செயலகத்தை புனரமைக்கவும் கொக்கிளாயில் புதிய கடற்றொழில் விரிவாக்க செயலகம் கட்டுவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி முறையே 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் 5 லட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளது. (ப-92)

## வவுனியாவில் உற்பத்தியாகும் கெக்கரிக்காய் ஏற்றுமதியாகும்

வவுனியா மே 2

ஏற்றுமதி செய்வதற்கான கெக்கரிக்காய் உற்பத்தி குறித்து வவுனியா மாவட்ட விவசாயிகளிடையே, ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் திட்டம் ஒன்றைச்செயற்படுத்துவதற்கு தனியார் ஏற்றுமதி நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியின் கிராமிய கடன் பிரிவைச் சேர்ந்த உதவி முகாமையாளர் திரு. கே. வி. முதலியார் தலைமையில் பிக்கிள் பெக்கர்ஸ் லிமிட்டட்டின் நிர்வாக பணிப்பாளர் திரு. வில்ஹெம் பல்தாசர் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழு அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்து விவசாயிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடியது.

இச்சந்திப்பின் போது இப்பயிர்ச் செய்கை மற்றும் அதனால் கிடைக்கவிருக்கும் லாபங்கள் குறித்தும் நடைமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

ஹற்றன், நஷனல் வங்கி விவசாயிகள் சங்க கிளைகளைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட முக்கியஸ்தர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்கள்.

ஸ்பெயின், மொறொக்கோ, மெக்சிக்கோ போன்ற நாடுகளுக்கு இதனை நல்ல லாபத்திற்கு ஏற்றுமதி செய்யும் சந்தர்ப்பம் உள்ளது என்றும் இதனை கிலோ 14 ரூபாவுக்கு விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய இந்த தனியார் நிறுவனம் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

இப்பயிர்ச் செய்கைக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் கிராம எழுச்சி ஆலோசக திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் இயங்கி வரும் விவசாயிகள் சங்ககிளைகளின் ஊடாக கடனுதவி வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இச்சந்திப்பின் வவுனியா மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு ஏ. கிருஷ்ணர் மற்றும் வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் திரு. எஸ். சோதிலிங்கம், கிராம எழுச்சி ஆலோசகர் திரு. ஏ. முரளிதரன் விவசாய உத்தியோகத்தர் திரு. எஸ் உருத்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (இ-164)

## நாணய மாற்று விகிதம்

30-04-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 229.38 | 230 34 |
| 100 | அமெரிக்கடொலர் | 3998 50 | 4001 50 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6498 80 | 6527 24 |
| 100 | ஜேர்மன் மார்க் | [illegible] | [illegible] |
| 100 | பிரெஞ்சுபிராங்க் | 703 45 | 716 40 |
| 100 | ஜப்பான் யென் | [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்டதும் கேட்டதும்

வெளிநாடுகளில் நீண்டகாலம்வசித்தபின் இலங்கை வருபவர்கள் இலங்கையிலுள்ள கைதேர்ந்த மோசடிக் கும்பல்களின் வலையில் சிக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன.

இதோ ஒரு சம்பவம்:-

வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் கடந்த 24 ஆம் திகதி கோட்டை ரயில் நிலையத்தில் யாழ்ப்பாணம் செல்வதற்கான ரிக்கெட் பெற காத்திருந்தார் சிலர் அவரை அணுகி தமிழில் கதைத்தனர். தம்மிடம் 2 ஆம் வகுப்பு உறங்கல் இருக்கை ரிக்கெட் இருப்பதாகக் கூறினர். இவர்களின் கதையை நம்பிய அந்த நபர் 300 ரூபா கொடுத்து ரிக்கெட்டைப் பெற்றுக் கொண்டார்.

குருநாகலில் ரிக்கெட் பரிசோதகர்கள் வந்தபோது அவர் ஏமாற்றப்பட்டது தெரிய வந்தது. அவரிடம் இருந்தது 3 ஆம் வகுப்பு உறங்கல் இருக்கை ரிக்கெட் மட்டுமே. பிரயாணத்திற்கான ரிக்கெட் கூட இருக்கவில்லை.

அவர் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறார் என்பதை எப்படியோ மோப்பம் பிடித்தவர்கள் தம் காரியத்தை கச்சிதமாக நிறைவேற்றி இருக்கிறார்கள்.

அபராதமாக அவர் 365 ரூபா செலுத்த வேண்டியதாயிற்று.

செய்திலோலன்.

# நடுநிலை நாடாக ஐக்கிய ஜேர்மனி; சோவியத் அரசு மீண்டும் வற்புறுத்து!

## நேட்டோ அணியில் சேர எதிர்ப்பு

மாஸ்கோ மே 1 ஐக்கிய ஜேர்மனியை உருவாக்குவது குறித்து சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கும் கிழக்கு ஜேர்மனி பிரதமருக்கும் இடையே நடந்த பேச்சுக்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

ஒன்றுபட்ட ஜேர்மனியின் பாதுகாப்புக் குறித்து இரு தலைவர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் நிலவுவுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

மாஸ்கோவில் நடந்த இப் பேச்சுக்களின் போது ஒன்றுபட்ட ஜேர்மனி நடுநிலை நாடாக இருக்கவேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் வலியுறுத்தினார்.

ஆனால் நேட்டோ இராணுவ அணியில் ஐக்கிய ஜேர்மனி இருப்பதையே தனது நாடு விரும்புவதாக கிழக்கு ஜேர்மனி பிரதமர் சொன்னார்.

ஐரோப்பாவுக்கு புதிய பாதுகாப்புத் திட்டம் ஒன்று உருவாக்கபடும்வரை இரண்டு ஜேர்மனிகளும் இணைவதைத் தாமதப்படுத்த வேண்டும் என்று சோவியத் தரப்பினர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
23-09-1934

மறைவு:
13-05-1989

**திரு. இ.சபாரட்ணம்**
(பாமா ஹாட்வெயர்ஸ் உரிமையாளர்)

ஆறாத துயரின்லே ஓராண்டு கழிந்ததுவே
மாறாத நினைவுடனே மண் தனிலே வாழுகிறோம்
நானென்ன பொழுதென்ன உம்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், தாய், சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''இரட்ணபவனம்''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(3310)


## பணயக்கைதி விடுதலை

பேரூட் மே 01

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்ட அமெரிக்க பணயக்கைதி பிராங்க் ஹெர்பர்ட்றீட் என்பவரை லெபனான் தீவிரவாதிகள் விடுதலை செய்வதாக அறிவித்திருக்கின்றனர். (எ)

# காஷ்மீர் பிரச்சினை பற்றி ஜப்- இந்திய பிரதமர்கள் பேச்சு!

புதுடில்லி மே, 1

காஷ்மீர் பிரச்சினையில் பதற்றத்தைத் தணிப்பதில் தீவிர கவனத்தைச் செலுத்தும்படி இந்தியா, பாகிஸ்தான் நாடுகளை ஜப்பான் பிரதமர் கைபு கேட்டுக்கொண்டார்.

புதுடில்லியில் பிரதமர் வி. பி சிங் அளித்த விருந்துபசார நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் ஜப்பான் பிரதமர் முன்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

பிரதமர் சிங் பேசுகையில் தீவிரவாதிகள், பிரிவினைவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரித்து வருவதாகச் சொன்னார்.

இரண்டு பிரதமர்களும் காஷ்மீர் பிரச்சினை பற்றியும் பேசினர்.

இதேவேளை பயங்கரவாதச் செயலைபாகிஸ்]தான் தூண்டிக்கொண்டு இருக்கும் வரை அந்த நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

பிரதமர் வி. பி. சிங் லக்னோவில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் இதனைத் தெளிவாக கூறினார்.

நியூயோர்க்கில் இந்திய - பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் நடத்திய பேச்சுக்களின் போது காஷ்மீர் தொடர்பான பதற்றத்தைத் தணிப்பது என்று இணக்கம் காணப்பட்டது தெரிந்ததே!

ஆனால் இரு நாடுகளுக்கும் இடையேயானபதற்றம்அதன் பின்னர் குறைந்ததாகத் தென்படவில்லை.

மீண்டும் பதற்றத்தை அதிகரிக்கும் விதத்தில் பாகிஸ்தானின் நடவடிக்கைகளும் இந்தியத் தலைவர்களின் பதிலும் அமைந்து இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

பாகிஸ்தானால் பயிற்றப்பட்ட காஷ்மீர் தீவிரவாதிகள் தொடர்ந்து இந்தியப் பிரதேசத்துக்குள் ஊடுருவல் செய்தால் இந்திய இராணுவம் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத் காஷ்மீர் பிரதேசத்தினுள் பிரவேசிக்குமா? — என்ற கேள்விக்கு பிரதமர் சிங் பதிலளிக்கையில் '' அப்படியான சாத்தியக்கூறு இல்லை என்று கூறிவிடமுடியாது '' — என்று சொன்னார்.

பாகிஸ்தானின் தலையீடும் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதும் சர்வதேச பயங்கரவாதத்துக்குத் தளம் அமைத்துக் கொடுப்பதாகவே முடியும் என்றும் பிரதமர் சிங் தெரிவித்தார். (எ)

## டொலர் வீழ்ச்சி

மணிலா, மே 01

இந்த ஆண்டில் அமெரிக்க டொலரின் மதிப்பு பெரும் வீழ்ச்சி அடையும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது.

'1990 பொருளாதார கண்ணோட்டம் பற்றியதனது அறிக்கையில் வங்கி நிர்வாகம் இதனை அறிவித்துள்ளது.

டொலரின் வீழ்ச்சி பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் வங்கி கூறியுள்ளது. (எ)

## லித்துஎனியா நிபந்தனை

மொன்ட்ரீல், மே1

சுதந்திரப் பிரகடனத்தை இடைநிறுத்தி வைக்க லித்துஏனியா அரசு நிபந்தனை விதித்துள்ளது.

உலக நாடுகள் உத்தரவாதம் அளித்தால் பிரகடனத்தை இடை நிறுத்தி வைத்து, சோவியத் யூனியனுடன் பேச்சுக்கள் நடத்தி அரசியல் தீர்வு காணத் தயாராக இருப்பதாக லித்துஏனியாப் பிரதமர் கனடாத்தலைநகர் ஒட்டாவாவில் அறிவித்தார். (எ)

## பெண்களுக்கு வாக்குரிமை

அப்பென்ஸெல், மே 01

சுவிட்ஸர்லாந்தில் உள்ளஅப்பென்ஸென் இன்னர் ஹோடன் கான்டனில் பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப் பட்டுள்ளது.

இந்த கான்டனில் பெண்களுக்கு வாக்குரிமை கொடுப்பது பற்றி கடந்தவாரம் தேர்தல் நடத்தப் பட்டது. அப்போது ஆண் வாக்காளர்கள் பெண்களுக்கு உள்ளூர்த் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை வழங்கக் கூடாது என்று வாக்களித்தனர். (எ)

## குண்டு வெடிப்பு; இருவர் பலி!

புதுடில்லி, மே 01

புதுடில்லி நகரில் நேற்று மாலை பஸ் ஒன்றில்குண்டுவெடித்தது காரணமாக, இரண்டு பேர் அந்த இடத்திலேயே மரணமானார். 30 பேர் படுகாயமடைந்தனர். (எ)

## 6 நிமிடங்களுக்கு ஒரு திருட்டு

நியூயோர்க், மே,1

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரம் தான் ஆயுதம் தரித்து நடத்தப்படும் திருட்டு, கொள்ளை போன்றவற்றில் முதலிடம் வகிக்கிறது.

கடந்த ஆண்டில் மட்டும் சுமார் ஒரு லட்சம் கொள்ளைகள் நடந்தன.

அதாவது 6 நிமிடங்களுக்கு ஒரு திருட்டு நடக்கிறது. (எ)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



**திருமதி றீற்றா தேவசகாயம் B. Sc**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

பிறப்பு: 8-3-1935
இறப்பு: 2-4-1990

அன்பின் உருவமாக, அறிவின் சிகரமாக, பாசத்தின் உறைவிடமாக, வாழ்வின் வழிகாட்டியாக வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து மாதம் ஒன்றாகிறது. உங்கள் அன்பு முகமும் நினைவுகளும் என்றென்றும் பசுமையாகவே இருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், மகள், மகன், மருமகன், பேரப்பிள்ளை.

''ஜோசவ் லொட்ஜ்''
தாழ்வு பாடு வீதி,
மன்னார்.

(3341)



## ★ கப்பல் ★ வேலை வாய்ப்புக்கள்

வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரிவதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை

01. இரண்டாவது ஒப்பிசர்
02. மூன்றாவது ஒப்பிசர்
03. மூன்றாவது இன்ஜினியர்
04. கப்பல் மின் இணைப்பு முகாமையாளர்
05. ஒயிலர்
06. A. B.
07. கிளீனர் Wiper
08. குடக் பேய்
09. Cook
10. MessBoy

● ஒரிஜினல் C. T. C. புத்தகம் உள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும் அனுபவமில்லாதவர்களும் நேரில் வரலாம்.

(இத்தாலி செல்லவிரும்புவோர் 10 - 05 - 90 முன் தொடர்பு கொள்ளவும்.)

**இத்தாலி, டென்மார்க், நோர்வே, கனடா, ஜெர்மன், கொலன்ட், சுவிஸ்**

செல்லவிரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும் ஒரிஜினல் விசா பாஸ்போட்டுடன் 35 நாட்களுக்குள் அனுப்பி வைக்கப்படும்.

**சவூதி, சிங்கப்பூர், டுபாய், குவைட்**

வீட்டுப் பணிப் பெண்கள் தேவை. தையல் வேலை தெரிந்தவர்கள் தேவை. விரும்பியவர்கள் பாஸ்போட்டுடனும் 6 புகைப் படமும், ஒரு கலர்ப் படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

### ★ டுபாய் ★

ஐக்கிய அராபு இராச்சியம் U. A. E.
தொழிலாளர்கள் தொழிற்சாலை

| | | |
|---|---|---|
| வேலைக்கு | 600 | D R. |
| மேசன் | 650 | D. R. |
| தோட்ட வேலை | 650 | D. R. |
| மின்சாரம் திருத்தல் | 750 | D. R. |
| தச்சு வேலை | 750 | D. R. |
| சாரதி | 750 | D. R. |

★ சாப்பாட்டுடன் தங்கும் வசதி உண்டு
6 புகைப்படங்களுடன் நற்சான்றிதலுடன் வரவும்.

### ★ ஈராக் ★

தொழிற்சாலைக்கு உதவியாளர்கள் தேவை

| | | |
|---|---|---|
| உதவியாளர்க்கு | 80 | DINNR |
| மேசன் | 85 | '' |
| மின்சார திருத்தல் | 90 | '' |
| தச்சு வேலைக்கு | 90 | '' |
| சாரதிக்கு | 110 | '' |

★ சாப்பாடுடன் தங்கும் வசதி உண்டு

### ★ பேருட் லெபனான் 45000/-

| | | |
|---|---|---|
| ஹோட்டல் தொழிலாளர் | 150 | U S Dollar |
| உதவி தொழிலாளர் | 125 | U S Dollar |
| சாரதி | 200 | U S Dollar |

★ சாப்பாடுடன் தங்கும் வசதி உண்டு.

### ★ சவூதி அரேபியா 35000/-

| | | |
|---|---|---|
| பேக்கரி தொழிலாளி | 500 | S. R. |
| Air Port சுத்திகரிப்பாளர் | 450 | S. R. |
| சாரதி கனரக வாகனம் ஓட்டுதல் | 800 | S. R. |
| வீட்டு சாரதி | 650 | S. R. |

★ சாப்பாடுடன் தங்கும் வசதி உண்டு
★ சாரதி அத்தாட்சி பத்திரம் ஐந்து வருடங்களுக்கு மேல் இருக்கவேண்டும்.

**காமினி ஸ்டேபலஸ்**
தொழில் அத்தாட்சி பதிவு இலக்கம் 689

**ந. சிவபாதசுந்தரம்**
சிவா வாச் வேக்ஸ்
185, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**ந. சிவநாதன்**
66/6, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[12974]



குமுலுஸ் D.F. போட்டி


# BASF
## குமுலுஸ் D. F.

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. இறேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ன்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







பெயர் ____________
முகவரி ____________
____________
வியாபாரியின் பெயர் ____________
____________
முகவரி ____________
____________

பின்லே கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிடெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அ[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கண்மணி நவரத்தினம்

கண்மணி நவரத்தினம் காலமானார்;

இவர் திரு. வேலுப்பிள்ளை நவரத்தினத்தின் (மேலதிக பதிவாளர், பதிவாளர் அலுவலகம், யாழ். செயலகம்) அன்பு மனைவியும், தனசீலன் (ப.நோ.கூ. சங்கம், ஊர்காவற்றுறை), வாசுகி, கருணா, லலினா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2-5-1990) புதன்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் ஊறுண்டி மாயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. நவரத்தினம்

காம் வீதி,
ஊர்காவற்றுறை.
[சி/4484]

## திரு. சுப்பிரமணியம் கணேசலிங்கம்

(B. A. (Hons)

தென்னைமரவாடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மட்டுவில் தெற்கில் வசித்தவரும், வவுனியா நன்னடத்தை அதிகாரியும் ஆகிய சுப்பிரமணியம் கணேசலிங்கம் அவர்கள் அகாலமரணம் ஆகிவிட்டார்.

இவர் கலாவதி (சுருக்கெழுத்தாளர் நகரசபைபருத்தித்துறை)யின் அன்புக்கணவரும், சுப்பிரமணியம் செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், இராசலிங்கம், கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும், கணபதிப்பிள்ளை, சுந்தரலிங்கம், தனபாலசிங்கம், இராசலிங்கம், மகாலிங்கம், கோணேசலிங்கம், நேசரத்தினம், கமலாம்பிகை, பூமணிதேவி, மனோன்மணிதேவி, லலிதாதேவி, கேமாவதி ஆகியோரின் சகோதரனும், கலாநிதி (ஜேர்மனி), சுகுணவதி நீலாவதி புஷ்பவதி, ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மட்டுவில் தெற்கிலுள்ள ''கமலபவனம்'' இல்லத்தில் 02-05-90 புதன்கிழமை பி. ப. 3.00 மணிக்கு நடைபெற்று நுணாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
மா. இராசலிங்கம்

''கமலபவனம்''
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(3389)

## திருமதி நல்லம்மா நடராசா

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வண்ணார்பண்ணையை வாழ்விடமாகக் கொண்டவருமான திருமதி நல்லம்மா நடராசா 1-5-90இல் காலமானார்.

இவர் பரமநாதன் (புகையிரதத் திணைக்களம்), விஸ்வலிங்கம் (சட்டத்தரணி) ஆகியோரின் தாயாரும், திருமதி இராஜேஸ்வரி பரமநாதன், திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம் (ஆசிரியை ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை (2-5-90) காலை 10-00 மணிக்கு அன்னாரின் 884, கே. கே. எஸ். வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. விஸ்வலிங்கம்
சட்டத்தரணி

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(12985)

## திரு. ப. இரகுபதி

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த திரு. ப. இரகுபதி (இலங்கை நிர்வாக சேவை) 29-04-1990 இல் அகால மரணமாகிவிட்டார்.

இவர் திரு. பசுபதி (கிராம சேவை உத்தியோகத்தர்), திருமதி பசுபதி மேரி திரேசா (அதிபர், நெடுந்தீவு) அவர்களின் அன்பு மகனும், சகுந்தலாதேவி, காலம் சென்ற நிர்மலாதேவி, தர்மபூபதி, ஜெயபதி, பிரகலாதேவி, தெய்வேந்திரா ஜபதி ஆகியோரின் அருமைச் சகோதரரும், நாகேந்திரம் (பேபி), நடராசா (பிரான்ஸ்), பேரம்பலம் (பருத்தித்துறை), மேரிமாக்கிறேற், ஞானம்மா, அந்தோனிப்பிள்ளை, அருளம்மா ஆகியோரின் பெறாமகனும், காலம்சென்ற வேதநாயகம் (விவசாய உத்தியோகத்தர்), திரு. பற்றிக் தோமஸ் ஆகியோரின் மருமகனும் ஆவர்.

அன்னாரின் நல்லடக்கம் 03-05-1990 முற்பகல் 11-00 மணியளவில் நெடுந்திவு கிழக்கு சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. பசுபதி

14-ம் வட்டாரம்,
நெடுந்திவு.
[12984]

## இளையதம்பி குருநாதன்

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர் இளையதம்பி குருநாதன் நேற்றிரவு காலமானார்.

அன்னார் றோசம்மா குருநாதனின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விவேகானந்தன், திருமதி சகுந்தலா இராமச்சந்திரன், திருமதி அருந்ததி இராச்சந்திரன், செல்வி மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. பத்மநேசன்

37, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
[12987]

# அடக்குமுறை திணிக்கப்பட்டால் - - -

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாதத்தைக் கிளப்பி, மோதல்களை உருவாக்கி தீர்வு முயற்சிகளைக் குழப்பி வந்தன. அதனால் மீண்டும் மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

இதேபோன்ற துர்ப்பாக்கிய நிலை இன்று எமக்கும் - அரசுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தையின் போதும் இடம்பெறுகின்றன. எதிரணிகள் தொடர்ந்து இனவாதத்தைக் கிளப்பி வருகின்றன.

இன்று நாம் அரசுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைகளின்போது இடைக்கால தீர்வாகவே மாகாண சபையை ஏற்று தேர்தலில் நிற்க விரும்புவதாக அரசிடம் தெரிவித்துள்ளோம்.

தமிழ் மக்களுக்குத் தேவையான நிரந்தரத் தீர்வு குறித்து அரசுடன் எவ்வித பேச்சும் நடத்தவில்லை.

எமது மக்களுக்குத் தேவையான நிரந்தரத் தீர்வு என்ன என்பது எமக்கும், எமது மக்களுக்கும் நன்கு தெரியும்.

நாம் அரசுடன் பேச்சு நடத்தச் சென்ற போது, நமது இயக்கமும், மக்களும் நெருக்கடியான நிலையில் இருந்தனர். இந்திய, இலங்கை இராணுவ அடக்குமுறை ஒருபுறம். எட்டப்பர் கூட்டங்களின் அடக்குமுறை மறுபுறம்.

இப்படியான சோதனைக் காலத்தில் எமது இயக்கத்தையும், எம்மீது மேலான அன்புகொண்ட எம் மக்களையும் காப்பாற்ற இந்தியாவை வெளியேற்ற வேண்டிய நிலையில் இருந்தோம். அந்நிலையில் மக்களுக்குச் சமாதானமும், நிம்மதியும் அவசியமானதாக இருந்தன.

இதன் காரணமாகவே இடைக்கால தீர்வை ஏற்க நிபந்தனையற்ற முறையில் அரசுடன்பேச முன்வந்தோம். இதன்மூலம் இந்திய இராணுவத்தை வெளியேற்றி வெற்றி கண்டோம்.

''மாகாண அரசை இடைக்காலத் தீர்வாக ஏற்று, தேர்தலில் நிற்கத் தயார்; எமது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரண வேலைகளைத் துரிதப்படுத்தும் நோக்குடனேயே இதற்குச் சம்மதம் தெரிவிக்கிறோம்'' — என்று ஜனாதிபதியிடம் அப்போது தெரிவித்தோம்.

எமது கோரிக்கைப்படி மாகாணசபையைக் கலைக்க ஜனாதிபதி தயார். கலைப்பதிலும் பிரச்சினை இல்லை.

ஆனால் அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதுதான் சிக்கலாக உள்ளது. அதற்கு அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். இதற்கு சால தமிழ் அரசியல் கட்சிகளினதும், முஸ்லிம் மற்றும் இடது சாரிக் கட்சிகளினதும் ஆதரவு தேவை

இந்த திருத்தத்தை சிறிமாவோ எதிர்க்கிறார். இந்தியாவுக்கு முண்டு கொடுக்கும் ஈ. பி ஆர். எல். எவ். போன்றவையும் எதிர்க்கக் கூடும். இதனால் இந்த திருத்தத்தை நீக்க முடியாத நிலை ஏற்படலாம்.

தமிழ்மக்களின் சுயநிர்ணய, அடிப்படை உரிமைகளுக்கு ஆப்பு வைக்கும் இந்த அரசமைப்புத் திருத்தத்தை கொண்டுவந்த இந்த அரசே, அதை நீக்க வேண்டிய பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

அரசுக்கும், எமக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப் பட்டபோது எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் சிங்கள இயக்கங்களும் அதை வரவேற்றன. ஆனால் இன்று அதற்கு மாறாகச் செயல்படுகின்றன.

இதன் காரணமாக ஜனாதிபதிமேல் அழுத்தம் ஏற்பட்டு வருகிறது. பேச்சுவார்த்தையை முறியடிக்க எதிரணிகள் முனைகின்றன. இதனால் பேரினவாதம் தலைதூக்கும் ஆபத்து இருக்கிறது. எனவே தென் இலங்கை சூழ் நிலையை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது

இங்கு அமைதியான சூழ் நிலை நிலவியபோதும் அரசியல் சூனிய நிலை தொடர்கிறது.

அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அப்படியே உள்ளன.

அரசு நிர்வாக முறை இல்லை மாகாண சபை கலைக்கப்படவில்லை. வெறுமையான நிலையே நிலவுகிறது.

இந்தச் சம்பவத்தில் அரசு எம்முடன் உடன்பாடு காணத்தவறினால் ஆபத்தான நிலைதான் உருவாகும்,

இந்நிலையில் சுதந்திரத் தேர்தல் நடத்த புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என்று சிங்கள மக்கள் குரல் எழுப்புகிறார்கள்,

சிங்களவர்களைக் காக்க இராணுவம், கடற்படை, விமானப்படை என்று 70 ஆயிரம் சிங்களவர்கள் ஆயுதம் தாங்கிய இயந்திரம் இருக்கின்றது. தமிழரைப் பாதுகாக்க ஏன் பாதுகாப்புப் படையை நாம் வைத்திருக்கக்கூடாது.

எம்மை நிராயுதபாணியாக்கிவிட்டு சிங்களப் படையைக் கொண்டு எமக்குப் பாதுகாப்புத் தரவா?

ஆயுதங்கள்தான் எமது இனத்தின் பாதுகாப்பு அரண் என்பதை அரசிடம் கூறியுள்ளோம்; கூறிவருகிறோம்; கூறுவோம்.

சமாதானம், சகஜ நிலை என்பதை ஜீரணிக்க முடியாத பேரினவாதிகள் கடந்த காலத்தைப் போன்று எம்மை மீண்டும் ஏமாற்ற முனைகிறார்கள்— என்றார். [உ-ஓ-3-9]

## நகரில் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டின. வேறுசில உணர்ச்சியை தூண்டின.

இந்திய இராணுவம் மக்களை எவ்வகையில் சித்திரவதை செய்து தொழில் இழப்புக்களையும், உயிர் இழப்புக்களையும் ஏற்படுத்தியது என்பதைப் பெரும்பாலான ஊர்திகள் பிரதிபலித்தன.

முதலில் தென்மராட்சியில் இருந்துவந்த ஊர்திகளே மத்திய கல்லூரியை அடைந்தன. அதைத்தொடர்ந்து வலிகாமம் பகுதியில் இருந்து ஊர்திகள் வந்துசேர்ந்தன. அதைத் தொடர்ந்து தீவுப்பகுதி ஊர்திகளும், பின் வடமராட்சி ஊர்திகளும் வந்தன.

## வழியில்....

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவர் ஐயாயிரம் ரூபாவையும் பெறுமதிவாய்ந்த எலெக்ரோனிக் உபகரணங்களையும் கொண்ட பொதியை வீதியில் தவறவிட்டார்.

இதனைத் தவறவிடப்பட்டதை இடையில் அவதானித்த அவர் பொதியைத் தேடும் நோக்கில் வந்த வழியே திரும்பினார்.

பொதியை வீதியில் கிடந்து எடுத்த இளைஞர்கள் சிலர் பொதியை தவறவிட்டவர் திரும்பி வரலாம் என்ற நம்பிக்கையுடன் வீதியில் காத்து நின்றனர்.

பொதி உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஈ.பி.ஆர்.எல்.எவ்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரு வழியாக அல்விஸ் பார்க்கைச் சென்றடைந்தது.

நூற்றுக் கணக்கானோர் இந்த ஊர்வலத்தில் பங்கு பற்றினர்

ஈ. பி. ஆர். எல். எவ் சார்பாக பாதகைகள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன 19 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தும் விதத்தில் இந்தப் பாதைகள் அமைந்திருந்தன.

அல்விஸ் பார்க்கில் நடைபெற்ற மேதினக் கூட்டத்திற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைவர் திரு. மகாநாம தலைமை வகித்தார்.

மலையக ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு. சந்திரசேகரன், ஈ. பி.ஆர். எல். எவ்வைச் சேர்ந்த திரு. ஏ. சிவா ஆகியோர் உட்பட பலர் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர். கூட்ட நிகழ்ச்சிகள் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் நடைபெற்றன. (உ-3)

# கண்ணீர் அஞ்சலி



## கந்தசாமி விஜயகுமார் [விஜயன்]

எதிர்பாராத விபத்தில் 1-5-90இல் அகால மரணத்தை தழுவிக்கொண்ட எம் இனிய தோழன் கந்தசாமி விஜயகுமாருக்கு [விஜயன்] எமது கண்ணீர் அஞ்சலி உரித்தாகட்டும்.

டச்சு வீதி, சாவகச்சேரி. [12986] நண்பர்கள்

# மரண அறிவித்தல்கள்

## செபமாலை ஜெயசீலன்

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த செபமாலை ஜெயசீலன் (யாழ் அரசினர் வைத்தியசாலை ஊழியர்) 30-04-1990 ல் காலமானார்.

இவர் பத்மநிதி (றஞ்சினி) யின் அன்புக் கணவரும், கிங்சிலி, ஜென்சி, பற்றிசியா, புருணு, ஜெசிலின், நளாயினி, சுபாசினி, ஜெயகாந்தன் ஆகியோரின் தகப்பனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 2-5-90 பிற்பகல் 4-00 மணிக்கு தகனக்கிரியைக்காக கில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

68/1, இராசாவின் தோட்டம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [12983]

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## கந்தசாமி விஜயகுமார் (விஜயன்)

சாவகச்சேரி டச்சு வீதியில் வசித்த கந்தசாமி விஜயகுமார் அகால மரணமானார்.

இவர் கந்தசாமி (கணக்கர்), விக்னேஸ்வரியின் அருமை மகனும், சாந்தினி, வசந்தினி, ஜெயக்குமார், சுவனி ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (2-5-90) புதன் கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
வ. கந்தசாமி [கணக்கர்]
[illegible]
உரிமையாளர்

டச்சு வீதி,
சாவகச்சேரி.
[3394]

# அறிவித்தல்

30 ஆம் திகதி இரவு 9 மணியளவில் சாவகச்சேரி யூனியன் பேக்கரியடியில் ஆயுதம் தாங்கிய மூவர் M.D 90 1738277 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றுவிட்டார்கள். இந்த மோட்டார் சைக்கிளைக் கண்டவர்கள் புலிகளின் மக்கள் முன்னணியின் காரியாலயத்திற்கு தகவல் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். இதற்கு சன்மானம் வழங்கப்படும்.

ஸ்ரீநிமுருகராசா

தபால் கந்தோர் றோட்,
சாவகச்சேரி.
[12982]

# 31-ம் நாள் நினைவு தினம்



## திருமதி வாரித்தம்பி நாகரத்தினம்
(பொன்னம்மா)

தாயே, எங்கள் மனக்கோவிலிற் குடிபுகுந்து விட்ட தெய்வமே! மெழுகுவர்த்தியாக உன்னை உருக்கி எங்களை வளர்த்த உத்தமியே! மாறாத் துயிலாகி, மறையாக் கவலை தந்து மறைந்துவிட்ட எம் அன்னையே! நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவிருக்கும்; உடலும் உயிரும் இருக்கும் வரை உங்கள் பாசம் எம்மை வழிநடத்தும்.

அன்னையின் 31ஆம் நாள் 3-5-90இல் நடைபெறவிருக்கிறது உறவினர், நண்பர்கள், அயலார் அனைவரையும் 31ஆம் நாள் நினைவு தினத்திலும், மதிய சபிண்டீகரண போசனத்திலும் கலந்து கொள்ளக் கோருகிறோம்.

மக்கள்

சோழியவத்தை,
புலோலி, தெற்கு, புலோலி.
(12981)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

02 — 05 — 1990



''ஆடாத உள்ளமதும் ஆடுமையா
ஆருதான் உன் பிரிவைத் தாங்குவார்கள்''

## திரு. செ. சச்சிதானந்தசிவம்

(முன்னாள் தபாலதிபரும், பிரபல சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்ட கர்ம வீரன். சேவை செய்வதில் ஒப்புயர்வற்ற சமூகத் தொண்டன். சரவணை ஸ்ரீ கதிர் வேலவனுக்குப் புதிய சித்திரத் தேர் காண விழைந்து தேர்த்திருப்பணிச் சபைக்கு தலைவனாய் நின்று உழைத்து தேர் முடிவுறும் நிலையில் தேர் ஓடும் நாளை காண ஆவலாய் காத்து நின்றவர் இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் பிரிவால் வாடும் அன்னாரது மனைவி, மக்கள் மற்றும் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்களின் ஆறாத் துயரில் நாமும் எமது சரவணை மக்களும் பங்கு கொண்டு அவரது ஆத்ம சாந்திக்காகச் சரவணைச் சரவணனை இறைஞ்சிக் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

தேர்த்திருப்பணிச் சபையினரும்
பரிபாலன சபையினரும்

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்
சரவணை.
(3391)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப்பிரதி ஒன்று
3R/PC - 6/30, 5/90, 5/50
★ விநியோகம் ஒரு வாரம் [7 Days]
★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# உதயன்

02 - 05 - 1990 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
புத்தாண்டுப் பரிசாக (போனஸ்)
விசேட கழிவுகள் வழங்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,



விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமையிலான மே தின ஊர்வலத்தில் பவனிவந்த ஊர்திகளில் இன்னும் சில

மரண அறிவித்தல்கள் 5ம் பக்கத்தில்

### தமிழ்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

எமது விடுதலைப் போராட்டத்தில் முதலாளிமாரும் பாமர தொழிலாளர்களும் அங்கம் வகிக்கிறார்கள். தொழிலாளர்களைச் சுரண்டும் முதலாளிகளைக் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறோம் - என்றார்.

மற்றும் தொழிற்சங்கஉறுப்பினர்களும் முன்னணி உறுப்பினர்களும் உரையாற்றினார்கள். (ஒ-9. 3)

# வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இந்தியா இலங்கையிடம் கோரிக்கை!

## இருதரப்பு பிரதமர்கள் சந்திப்பின்போது வலியுறுத்து

புதுடில்லி, மே 2

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லா சமுகத்தினரும் பாதுகாப்பையும் பந்தோபஸ்தையும் பெறுவதற்கு ஏதுவாக, ஏற்கனவே கொடுத்துள்ள வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுள்ளது.

இலங்கைப் பிரதமர் டி. பி விஜேதுங்கா, இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கை புதுடில்லியில் நேற்று சந்தித்துப் பேசினார்.

அப்போது தான் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தியாவில் இலங்கைத் தமிழ் அகதிகள் விரைவாக தாயகம் திரும்பிச் செல்ல இலங்கை தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவது துணைபுரியும் என்றும் பிரதமர் சிங் அப்போது தெரிவித்தார்.

அமைதிப் படையினர் ஆற்றிய சேவைகள், இலங்கையில் இருந்து அமைதிப் படையினர் வெளியேறியது, ஆகியவற்றையும் பிரதமர் விஜேதுங்கா சந்திப்பின் போது பாராட்டினார்.

இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என்ற கருத்தைபேச்சுக்களின்போது இரு பிரதமர்களும் ஏற்றுக் கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூன்று நாள் கூட்டத்தில் பங்கு ஏற்பதற்காக பிரதமர் டி. பி. விஜேதுங்கா புதுடில்லி சென்றார்.

இக் கூட்டத்தில் 49 நாடுகள் பங்கு பற்றுகின்றன. (ஒ-எ)

### தோட்டத் தொழிலாளர்களில்

# 1 லட்சம் பேரை திருப்பி அழைக்க இந்தியாவை இலங்கை கோரும்

கொழும்பு, மே 2

இலங்கையில் எஞ்சியுள்ள ஒரு லட்சம் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளும்படி இந்தியாவை இலங்கை அரசு விரைவில் கோரவுள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர்மேலும் சொன்னதாவது;

இந்திய வம்சாவழியினரைத் திருப்பி அழைத்துக் கொள்வதற்கு ஏதுவாக கப்பல் சேவையை உடனடியாகத் தொடங்கும்படி நாம் இந்திய அரசைக் கேட்டுள்ளோம்.

1987இல் ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி, இலங்கையில் எஞ்சியுள்ள இந்திய வம்சாவழியினரைத் திருப்பி அழைத்துக் கொள்ள இந்தியா இசைவு தெரிவித்திருந்தது.

இப்போது அந்த வம்சாவழித் தோட்டத் தொழிலாளர் குடிபெயர்ந்து செல்ல நேரம் வந்துவிட்டது

பழையபடி கப்பல் சேவையை நடத்த இந்தியா முன்வரா விட்டால், அது இலங்கை - இந்திய உடன்பாட்டைக் கெடுத்ததாக ஆகும்.

— இப்படி அமைச்சர் விஜேரத்னா சொன்னார். (ஒ-எ)

### மாஸ்கோ மேதின ஊர்வலத்தில்

# கோர்பச்சேவுக்கு எதிராக கோஷம்

மாஸ்கோ, மே 2

மாஸ்கோவில் நடந்த மே தின அணிவகுப்பு ஊர்வலத்தின் போது சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்ப்பசேவிற்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அணிவகுப்பு மரியாதையை திரு. கோர்ப்பச்சேவ் ஏற்றுக் கொண்டு நின்றார்.

அணிவகுப்பு மரியாதையில் கலந்து கொண்ட லித்துஏனிய கோஷ்டியினர், திரு. கோர்ப்பச்சேவை அண்மியதும், அவருக்கு எதிராகக் கூக்குரல் எழுப்பி நையாண்டி செய்தனர்.

'வெட்கம், வெட்கம்' என்றும் கோஷமிட்டனர்.

செஞ்சதுக்கத்தில் லெனின் நினைவுச் சின்னம் அருகே இச் சம்பவம் இடம்பெற்றது.

மேதின அணிவகுப்பு ஒன்றில் உத்தியோகப்பற்றற்ற குழு ஒன்றைக் கலந்துகொள்ள சோவியத் அரசாங்கம் அனுமதித்தது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

### இலங்கை தொழிற் சங்க சம்மேளனக் கலந்துரையாடல்

குருநகர், மே. 2

'தொடர்ந்து நடைபெற இருக்கும் தமிழ்த்தேசியஇனத்தின் போராட்டத்துக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவிப்பதுடன் தமிழ், சிங்கள, முஸ்லிம் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளைக் காக்கவும், உலகப்பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காகவும் அயராது உழைக்கவேண்டும்',

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் விரிவுபடுத்தப்பட்ட கமிட்டியும், சம்மேளன முக்கியஸ்தர்களும் கலந்துகொண்ட மேதினச் சந்திப்பு ஜனாப் எம். ஏ. சி. இக்பால் தலைமையில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 10 மணிக்கு நாவலர்வீதிக் காரியாலயத்தில் நடைபெற்ற சந்திப்பில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது,

'சோஷலிச நாடுகளில் கம்யூனிஸ்ட் கோட்பாடு பின்நோக்கிப்போகக் காரணம் தலைமைத்துவத்தின் தப்பான வழிகாட்டல்களும், அணுகு முறைகளும்தான். இனிவரும் காலங்களில் சோஷலிச நாடுகளைக் கட்சி எழுப்ப விளையும் இளைய தலைமுறைத் தலைமைத்துவம் இதனைப் பாடமாகக் கொண்டு மக்களை வழிநடத்த முன்வரவேண்டும்'.

இப்படி மேலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (இ-51)

### ஷார்ஜா கிரிக்கெட்:

# இறுதி ஆட்டத்திற்கு பாகிஸ்தான் தகுதி!

## இன்று அரை இறுதியில் இலங்கை

ஷார்ஜா, மே 2

''ஒஸ்ரோலேசியாகிண்ணத்திற்காக ஷார்ஜாவில் நடைபெற்று வரும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் தகுதியை பாகிஸ்தான் பெற்றது.

நேற்று நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற அரைஇறுதிப் போட்டியில் பாகிஸ்தான், நியூசிலந்து அணியை 8 விக்கட்டுகள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலந்து அணி 32 ஓவர்களில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

15.4 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 2 விக்கட்டுகள் இழப்புக்கு தேவைப்பட்ட ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது.

ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான மற்றைய அரை இறுதி ஆட்டம் இன்று நடைபெறும். (உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02 - 05 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏதும் இல்லை!

## மேதினக் கூட்டத்தில் அநுரா உரை

கொழும்பு, மே 2

சுதந்திரக் கட்சியில் கருத்து வேறுபாடுகளோ பிளவோ இல்லை. கட்சிக்குள் பிளவு என்று பத்திரிகைகள் தான் தவறாக செய்தி வெளியிட்டு வருகின்றன.

சுதந்திரக் கட்சி [illegible] மேதினக் கூட்டத்தில் பேசியபோது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அனுரா பண்டாரநாயக்கா இப்படிக் கூறினார்.

கொழும்பு [illegible] பூங்காவில் சுதந்திர [illegible] மேதினக் கூட்ட[illegible] பெற்றது.

### ஜனாதிபதியின் மேதின உரை:

# கட்சிகளுடன் ஓர் இணக்கத்துக்கு வருவது மாபெரும் வெற்றியாகும்!

கொழும்பு, மே 2

சகல கட்சிகளையும் தோல்வியடையச் செய்வதிலும் பார்க்க அவற்றுடன் ஓர் இணக்கத்துக்கு வருவது மாபெரும் வெற்றியாகும்.

—இவ்வாறு கூறினார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா.

காலிமுகத்திடலில் நேற்று மாலை நடந்த ஐ. தே. க. மேதினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார். அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது;-

நாட்டில் அமைதியைக் கொண்டுவருவேன் என்ற எனது வாக்குறுதி படிப்படியாக இன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வறுமை ஒழிப்புக்கே எனது அரசு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும்.

இந்தநாட்டைத் தாயகமாகக்கொண்ட சிங்களவர், தமிழர். முஸ்லிம்கள், பறங்கியர் ஒன்றுபட்டு சகோதரர்களாக வாழும்நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது.

சகல இன மக்களுக்கும் எனது அரசு நீதிவழங்கும்,

மக்கள் சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வைக்கும் அரசு மதிப்பளிக்கும்.

யதார்த்த முறையில் பிரச்சினைகளுக்கு எவ்விதம் தீர்வு காணவேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் செயல்முறையில் காட்டி வருகின்றார்.

செயல்முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்ட ஒரு கர்மவீரராக கோர்பச்சேவ் விளங்குகின்றார் - என்றார்.

# தொழிலாளர்களின் ஐக்கியத்துக்கு அறைகூவல் விடும் நாள் மேதினம்

## கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம் மே 2

''மேதினம் களியாட்டு விழாவோ, அல்லது தொழிலாளர்களின் ஞாபகார்த்த விழாவோ அல்ல, சகலதொழிலாளர்களும் இணைந்து தொழிலாளர்களுக்காக ஐக்கியப்பட வேண்டும் என்று அறைகூவல் விடும் தினமே மேதினம் ஆகும்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியும், அதன் தொழிற்சங்கங்களும் இணைந்து நேற்று நடத்திய ஐக்கிய மேதினக் கூட்டத்தில் பேசுகையில் தொழிற்சங்கப் பிரமுகர் திரு. யோசேப் மேற்கண்டவாறு கூறினார்.

பலாலி வீதி, பொன் குமாரசாமி நூலக மண்டபத்தில் திரு. து. குகதாஸ் தலைமையில் நடந்த இந்தக்கூட்டத்தில் அவர் மேலும்பேசுகையில்

எம் தொழிலாளர்கள் உரிமைகளை வடக்கு-கிழக்கு தொழிலாளர்கள் மட்டும் இணைந்து போராடுவதன் மூலம் சாதிக்க முடியாது. தென் இலங்கை தொழிலாளர்களுடன் இணைந்து போராடுவதன் மூலமே சாதிக்க முடியும், என்றார்.

தொழிற்சங்கப் பிரமுகர் திரு. எஸ். இராசையா பேசுகையில், எம்போராட்டத்தை மழுங்கடிக்கும் திட்டமாகவே அரசு பாட்டுக்கச்சேரிகளையும், நாட்டியநிகழ்ச்சிகளையும் நடத்துகிறது என்றார்.

தொழிற்சங்கப் பிரமுகர் திரு. பீ. ஜே. அன்ரனி பேசுகையில், உலகில் புரட்சி, நிகழ்வுகள், நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆனால் அவை ஒரே நாளில் இல்லை. உலகம் முழுவதும் ஒரே நாளில் கொண்டாடப்படும் புனித நாள்தான் மேதினம்'' என்றார்.

எஸ். விரசிங்கம், ஐ. அருணாசலம் உட்பட பலர் உரையாற்றினார்கள். (இ-3)

# குறைந்தபட்ச விமோசனமாவது தமிழருக்குக் கிடைக்க வேண்டும்

## இடது கம்யூனிஸ்ட் கூட்டத்தில் உரை

குருநகர், மே. 2

''பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற்று குறைந்தபட்ச விமோசனமாவது தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென எமது கட்சி விரும்புகிறது''

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மேதினக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய தோழர் சி. கா. செந்திவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். ஸ்ரான்லி வீதி பட்டப்படிப்புகள் கல்லூரியில் நேற்று காலை 10 மணிக்கு மேற்படி கூட்டம் நடைபெற்றது.

தோழர் சி. கா. செந்திவேல் தொடர்ந்து பேசியதாவது: ''இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும். விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். அடிப்படை மனித உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டும் ஆகிய இந்த மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து எமது மேதின எழுச்சிக் கூட்டத்தை இன்று ஒழுங்கு செய்துள்ளோம்.

கடந்த காலங்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் வன்முறைகளில் பெரும்பாலும் பாதிக்கப்பட்டனர். ஐ. தே. க அரசு பதவி மாற்றங்களைச் செய்துள்ளதே தவிர அடிப்படைக் கருத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இக் கால கட்டத்தில் குறுகிய அரசியல் முரண்பாடுகளை விட்டுபரந்துபட்ட வெகுஜன மக்கள் எழுச்சிக்கு வழி வகுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் சொன்னார்.

திரு. தணிகாசலம், திரு. டொன் பொஸ்கோ, திரு. கா. பஞ்சலிங்கம், திரு. கா. கதிர்காமநாதன் ஆகியோரும்பேசினர். [இ-51]

### 18 இடது...

''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்று கோஷம் எழுப்பும் இடதுசாரிகள், இப்படிச் சிதறிப் போய் திக்குத்திக்காகக் கூட்டங்கள் நடத்தியது வேதனைக்குரிய விடயமாகும் என்று இடதுசாரி அரசியல் பிரமுகர்கள் கவலை வெளியிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவும் நேற்று மேதினக் கூட்டங்கள்நடத்தின என்பது தெரிந்ததே. (ஒ)

### காயமடைந்தவர் மரணம்

சாவகச்சேரியில் கடந்த சனிக்கிழமை நடந்த வாகன விபத்தில் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கே. விஜயகுமார். (வயது 17) நேற்றுக் காலை மரணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org